JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//462/2018 |
| | : | Prosecution P.W --1 |
| NAME | : | Nagore meeran |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 15.02.2022.

மு.வி.

நான் தற்போது பொட்டல்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் சமையல் வேலை சென்று வருகிறேன், ஆஜர் எதிரி என் கணவர் ஆவார். எங்களுக்கு கல்யாணம் ஆகி 19 வருடம் ஆகிறது, எங்களுக்கு குழந்தை என்று என் தம்பி மகளை எடுத்து வளர்த்து வந்தோம். அதன் பின்பு எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன் பின்பு இரண்டு குழந்தைகளையும் நான்தான் பாரமரித்து வருகிறேன், ஆஜர் எதிரி என் குழந்தைகளை பாரமரிக்கவில்லை. என் கணவருக்கும் எங்கள் டீக்கடைக்கு வந்து போன மைமத் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டு எங்களுக்கு இருவருக்கும் சண்டை ஏற்பட்டது, என் கணவர் என்னிடம் அவனை நான் திருமணம் செய்து போவதாக சொன்னார். 21.06.2018 ம் தேதியன்று பகல் 11.00 மணிக்கு எங்களுக்கு சாப்பாட்டுக்கு பணம் வேண்டி மவுண்ட் ரோட்டில் உள்ள லாலா கடை அருகில் இருந்த என் கணவரின் டீக்கடைக்கு சென்று அவரிடம் சாப்பாட்டிற்கு பணம் கேட்டேன், என் கணவர் என்னை தேவிடியா என்று

அசிங்கமாக பேசிவிட்டு எனக்கு பணம் கொடுக்கவில்லை, எனக்கு அதனால் அவமானம், மற்றும் அசிங்கமாக இருந்தது. உடனே நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன் பின்பு என்னை அவர் கவனிக்கவில்லை, அதன் பின்பு நான் ஜமாத்தில் சொன்னேன், ஜமாத்தில் எங்களை சேர்ந்து வாழ சொன்னார்கள், எதிரி ஜமாத்திற்கு கட்டுப்படவில்லை, அதன் பின்பு நான் தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் சென்று புகார் மனு கொடுத்தேன், அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதான், அந்த புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான், அந்த புகார் மனு அ,சா,ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது, இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு/வி

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை,),